©
தமிழ்நாடு அரசு
2013

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 5.60 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 29]
சென்னை, புதன்கிழமை, ஜூலை 24, 2013
ஆடி 8, விஜய, திருவள்ளுவர் ஆண்டு—2044

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கைகள்.**

*[அரசாணை (2டி) எண் 57, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J—1)த் துறை, நாள் 5—11—2012.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும், வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை—600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 5—8—2009 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்—II பிரிவு 2 இல் 258—259 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II (2)/தொ.ந.வே.வா/390/2009 ஆம் எண் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழக ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் காற்றூட்டப்பட்ட பானங்கள் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்களுக்கு, கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணிகளுக்கு / பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:—

## விவர அட்டவணை

**காற்றூட்டப்பட்ட பானங்கள்/ சோடா தயாரிப்புத் தொழிலில் வேலைவாய்ப்பு**

| பணியாளர்களின் வகைகள் (1) | குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்கள் ரூ. காசு. (2) | | |
|---|---|---|---|
| | மண்டலம்–A | மண்டலம்–B | மண்டலம்–C |
| | | (நாளொன்றுக்கு) | |
| **குடிசைத்தொழில் பிரிவுகள்** | | | |
| (1) பொதுப் பணியாளர்கள் | 93.00 | 87.50 | 85.00 |
| (2) உதவியாட்கள் | 89.50 | 85.50 | 8050 |
| **ஓரளவு தானியங்கிப் பிரிவுகள்** | | | |
| (1) வேதியியலார் | 124.50 | 120.00 | 116.00 |
| (2) மேற்பார்வையாளர்/மேலாள் | 116.00 | 110.50 | 106.50 |
| (3) இயந்திரக் கம்மியர் | 106.50 | 102.00 | 98.00 |
| (4) பொருத்துநர் | 106.50 | 102.00 | 98.00 |
| (5) மின் கம்மியர் | 106.50 | 102.00 | 98.00 |
| (6) புட்டியில் நிரப்புபவர்/இயந்திரம் இயக்குபவர் | 104.50 | 98.50 | 94.50 |
| (7) புட்டி கழுவுபவர் | 98.50 | 93.00 | 89.50 |
| (8) உதவியாள் | 98.50 | 93.00 | 89.50 |
| (9) சரக்குகளை ஏற்றி இறக்குதல் | 98.50 | 93.00 | 89.50 |
| **தானியங்கிப் பிரிவுகள்** | | (மாதம் ஒன்றுக்கு) | |
| (1) பொது மேலாளர் | 5725.00 | 5375.00 | 5200.00 |
| (2) உற்பத்தி மேலாளர் | 5549.00 | 5200.00 | 5026.00 |
| (3) தலைமை வேதியியலார்/ தரக் கட்டுப்பாடு ஆய்வாளர் | 5375.00 | 5026.00 | 4850.00 |
| (4) முறை மாற்றுப் பணி பொறியாளர்/உற்பத்திப் பொறியாளர் | 5375.00 | 5026.00 | 4850.00 |
| (5) முதலாள்/ மேற்பார்வையாளர்/கொதிகலன் இயக்குபவர்/இயந்திரக் கம்மியர்/ உற்பத்தி உதவியாள் | 3976.00 | 3626.00 | 3450.00 |
| | | (நாளொன்றுக்கு) | |
| (6) மின் கம்மியர் | 120.00 | 112.00 | 106.50 |
| (7) பொருத்துநர் | 120.00 | 112.00 | 106.50 |
| (8) சரக்குகளை ஏற்றி, இறக்குபவர்<br>(9) உதவியாள் | 116.50 | 106.50 | 102.00 |
| **நிருவாகப் பணியாளர்கள்** | | (மாதம் ஒன்றுக்கு) | |
| (1) மேலாளர் | 3976.00 | 3626.00 | 3450.00 |
| (2) காசாளர்/கணக்காளர் | 3801.00 | 3450.00 | 3276.00 |

| | | | |
|---|---|---|---|
| (3) எழுத்தர்/தட்டச்சர் | 3102.00 | 2926.00 | 2751.00 |
| (4) ஓட்டுநர் | 3102.00 | 2926.00 | 2751.00 |
| (5) ஏவலாள்/குற்றேவலர்/காவலாள்/ துப்புரவுப் பணியாளர் | 2926.00 | 2783.00 | 2401.00 |

**விளக்கங்கள்:–** (1) மண்டலங்களின் வகைபாடு:

மண்டலங்கள் A, B மற்றும் C பின்வரும் பகுதிகளைக் கொண்டிருக்கும்.

(1) *மண்டலம்–A* –மாநகராட்சிகள்

(2) *மண்டலம்–B*–அனைத்து வகை நகராட்சிகள்

(3) *மண்டலம்–C*–மண்டலம்–A, மண்டலம்–B, ஆகியவற்றில் குறிப்பிடப்பட்டவை நீங்கலான ஏனைய பகுதிகள்

**2. அகவிலைப்படி:**

தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475 ஆகும்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு கூடுதலாக ரூ.5.05 (ஐந்து ரூபாய் ஐந்து காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

**3.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

**4.** (i) நாட்கூலியைக் கணக்கிட, மாத ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(ii) மாத ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

**5.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, அறநிலையங்கள் மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2டி) எண் 64, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த்துறை நாள் 14 டிசம்பர் 2012.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும்

இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை—600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் – வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 23—9—2009 ஆம் நாளிட்ட *தமிழ்நாடு அரசிதழின்* பாகம் II-பிரிவு 2—ல், 361—363 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II/LE/481/2009 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் திரைப்படத் தொழிலில் (தயாரிப்பு, விநியோகம், விளம்பரம் ஆகியவை உட்பட) உள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### திரைப்படத் தொழிலில் (தயாரிப்பு விநியோகம், விளம்பரம் ஆகியவை உட்பட பணியிலமர்த்தப்பட்டவர்கள்

| | பணியாளர்கள் வகைகள் | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூபாய்—காசு) |
|---|---|---|
| | (1) | (2) |
| I | திரைப்பட படப்பிடிப்பு நிலையம் (Studios) | |
| | 1 **தயாரிப்பு** | |
| | (1) துப்புரவுப் பணியாளர் /பெருக்குபவர் | 3082.00 |
| | (2) பணிப்பெண்/அலுவலக உதவியாளர்/ஏவலாள் | 3135.00 |
| | (3) காவலாள் | 3135.00 |
| | (4) ஓட்டுநர் (கனரக வாகனங்கள் மற்றும் வேன்) | 3790.00 |
| | (5) ஓட்டுநர் (இலகுரக வாகனங்கள்) | 3536.00 |
| | (6) உதவியாள் (Attendar) | 3188.00 |
| | (7) உதவிக்கணக்காளர் | 4141.00 |
| | (8) கணக்காளர் | 4796.00 |
| | (9) எழுத்தர் | 3834.00 |
| | (10) தட்டச்சர் | 3992.00 |
| | (11) சுருக்கெழுத்து தட்டச்சர் | 4288.00 |
| | (12) உதவி மேலாளர் | 5644.00 |
| | (13) மேலாளர் | 6851.00 |
| (2) | **மின்பிரிவு** | |
| | (1) மின் விளக்கு தூக்குபவர் | 3536.00 |
| | (2) மின் பணியாளர் (நிலை II) | 3922.00 |
| | (3) மின் பணியளார் (நிலை I) | 4288.00 |
| (3) | **வார்ப்படப் பிரிவு** | |
| | (1) உதவியாள் | 3135.00 |
| | (2) வார்ப்பட மேஸ்திரி | 4541.00 |

| பணியாளர்கள் வகைகள் | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூபாய்—காசு) |
|---|---|
| (1) | (2) |
| **(4) ஓவியப் பிரிவு** | |
| (1) உதவியாள் | 3135.00 |
| (2) உதவி ஓவியர் | 4141.00 |
| (3) தலைமை ஓவியர் | 4541.00 |
| **(5) கலைப்பிரிவு** | |
| (1) உதவியாள் | 3135.00 |
| (2) தச்சர் (நிலை II) | 4141.00 |
| (3) தச்சர் (நிலை I) | 4541.00 |
| (4) மேஸ்திரி | 4691.00 |
| **(6) ஒப்பனைப் பிரிவு** | |
| (1) ஒப்பனை உதவியாளர் | 3536.00 |
| **(7) புகைப்பட கருவித் துறை** | |
| (1) புகைப்பட கருவி உதவியாளர் (நிலை II) | 3790.00 |
| (2) புகைப்பட கருவி உதவியாளர் (நிலை I) | 4288.00 |
| (3) புகைப்பட பிரிவிற்குப் பொறுப்பு வகிப்பவர் | 6047.00 |
| **(8) திரைப்பட சுருளைக் கழுவும் பிரிவு—(Laboratory Department)** | |
| (1) திரைப்படச் சுருளை வேதியல் முறையில் மேம்படுத்தும் உதவியாளர் நிலை (நிலை I) | 4166.00 |
| (2) திரைப்படச் சுருளை வேதியல் முறையில் மேம்படுத்தும் உதவியாளர் நிலை (நிலை II) | 3667.00 |
| (3) திரைப்படச் சுருளை வேதியல் முறையில் மேம்படுத்தும் உதவியாளர் நிலை (நிலை III) | 3282.00 |
| (4) பிரிவுப் பொறுப்பாளர் | 5050.00 |
| (5) திரைப்படச்சுருள் நெகடிவ் பரிசோதிப்பவர் | 3667.00 |
| (6) திரைப்படச்சுருள் பாசிட்டிவ் பரிசோதனை உதவியாளர் | 3282.00 |
| **(9) வேதியியல் பிரிவு** | |
| (1) வேதியியல் பொருட்களை கலப்பவர் | 4035.00 |
| (2) வேதியியல் பொருட்களைக் கலக்கும் உதவியாளர் | 5050.00 |
| (3) வேதியியலர் | 5050.00 |
| **(10) அச்சகப் பிரிவு** | |
| (1) அச்சக உதவியாளர் நிலை I | 4541.00 |
| (2) அச்சக உதவியாளர் நிலை II | 4035.00 |
| (3) அச்சக உதவியாளர் நிலை III | 3536.00 |
| **(11) திரைப்படச்சுருள் மேம்படுத்தும் பிரிவு** | |
| (1) திரைப்படச்சுருள் நெகடிவ் பரிசோதிப்பவர் | 3667.00 |
| **(12) திரைப்படம் காட்டும் இயந்திரப் பிரிவு** | |
| (1) திரைப்படம் காட்டும் இயந்திரத்தை இயக்குபவர் (நிலை I) | 4035.00 |
| (2) திரைப்படம் காட்டும் இயந்திரத்தை இயக்குபவர் (நிலை II) | 3536.00 |
| (3) திரைப்படம் காட்டும் இயந்திரத்தை இயக்கும் தலைமை இயக்குபவர் | 5050.00 |

| | பணியாளர்கள் வகைகள் | குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (ரூபாய்—காசு) |
|---|---|---|
| | (1) | (2) |
| **(13)** | **ஒலிப்பதிவுப் பிரிவு** | |
| | (1) உதவியாளர் | 3282.00 |
| | (2) ஒலிப்பதிவு செய்யும் உதவியாளர் ஒலிப்பதிவு அறை உதவியாளர் | 3536.00 |
| | (3) ஒலிப்பதிவாளர் | 5050.00 |
| **(14)** | **படத்தொகுப்புப் பிரிவு** | |
| | (1) படத்தொகுப்புப் பிரிவு பையன் | 3536.00 |
| **II** | **வெளிப்புறப் படப்பிடிப்புப் பிரிவு** | |
| | (1) வேன் ஓட்டுநர் (கனரக வாகனம்) | 3834.00 |
| | (2) மின் பணியாளர் (நிலை I) | 4288.00 |
| | (3) மின் பணியளார் (நிலை II) | 3922.00 |
| | (4) மின்விளக்கு பொறுப்பாளர் (Lightman) | 3536.00 |
| | (5) புகைப்படக் கருவி உதவியாளர் (நிலை I) | 4796.00 |
| | (6) புகைப்படக் கருவி உதவியாளர் (நிலை II) | 4141.00 |
| | (7) ஒலிப்பதிவாளர் | 4288.00 |
| | (8) ஏவலாள் அல்லது காவலாள் | 3135.00 |
| | (9) ஒலிப்பதிவு உதவியாளர் | 3230.00 |
| **III** | **விநியோகம்** | |
| | 1. துப்புரவு பணியாளர் | 3082.00 |
| | 2. அலுவலகப் பையன்/சிப்பம் செய்பவர் (ஏவலாள் எனப்படுபவர்) | 3135.00 |
| | 3. காவலாள் | 3135.00 |
| | 4. ஓட்டுநர் (கனரக வாகனம் வேன்) | 3790.00 |
| | 5. ஒட்டுநர் (இலகுரக வாகனம்) | 3536.00 |
| | 6. லைன் ஆப்ரேட்டர் (Line Operator) | 3335.00 |
| | 7. பிரதிநிதி | 3230.00 |
| | 8. தொலைபேசியை இயக்குபவர்<br>9. எழுத்தர் | 3834.00 |
| | 10. விளம்பர அறை பொறுப்பாளர் | 3790.00 |
| | 11. தட்டச்சர் | 3992.00 |
| | 12. சுருக்கெழுத்து தட்டச்சர் | 4288.00 |
| | 13. காசாளர் | 4141.00 |
| | 14. உதவிக் கணக்காளர் | 4141.00 |
| | 15. கணக்காளர் | 4796.00 |
| | 16. உதவி மேலாளர் | 5644.00 |
| | 17. அலுவலகக் கண்காணிப்பாளர் | 4796.00 |
| | 18. மேலாளர் | 6851.00 |

| | | |
|---|---|---|
| **IV** | **விளம்பரம்** | |
| | 1. துப்புரவு பணியாளர் | 3082.00 |
| | 2. அலுவலகப் பையன்/ஏவலாள் | 3135.00 |
| | 3. காவலாள் | 3135.00 |
| | 4. ஓட்டுநர் (விளம்பரவேன், கனரக வாகனம்) | 3790.00 |
| | 5. ஓட்டுநர் (விளம்பர வேன், இலகுரக வாகனம்) | 3536.00 |
| | 6. தொலைபேசியை இயக்குபவர் } 7. எழுத்தர் | 3834.00 |
| | 8. தட்டச்சர் | 3992.00 |
| | 9. சுருக்கெழுத்துத் தட்டச்சர் | 4288.00 |
| | 10. உதவி கணக்காளர் | 4141.00 |
| | 11. காசாளர் | |
| | 12. கணக்காளர் | 4796.00 |
| **V** | **ஏனையப் பிரிவு** | |
| | 1. ஏனையோர் | 3082.00 |

**விளக்கம்:–** (1) அகவிலைப்படி–மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் கீழே குறிப்பிடப்பட்டவாறு பணியாளர்களுக்கு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(i)* அகவிலைப்படியானது 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982–100 என்பதன் அடிப்படையில் 475 புள்ளிகள் ஆகும்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் திங்கள் ஒன்றுக்கு ரூபாய் 6.45 (ரூபாய் ஆறு மற்றும் நாற்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்குரிய அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணின் சாரசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து இத்திருத்தம் செயலக்கு வரும்.

*(iii)* முதல் கணக்கீடு, முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள், ஊதிய வீதங்களை கணக்கிட, மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) இதில் நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் தற்போது வழங்கப்படும் ஊதியங்கள் அதிகமாக இருக்கும் இடங்களிலெல்லாம் அதே அளவு ஊதியங்கள் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

## தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(J1)த் துறை

*[அரசாணை (2D) எண் 65, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 17 டிசம்பர் 2012.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும், வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரையை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் நல ஆணையாளர் மூலம், தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் – வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

### வரைவு அறவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் 18–11–2011 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழில் பாகம்–II, பிரிவு 2 இல் 437 மற்றும் 438 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II/(2)//தொ.வே.வா/607/2009 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழக ஆளுநர் அவர்கள் தமிழ்நாடு மாநிலத்தில் பெட்ரோலியத் திரவவாயு உருளைகள் (Cylinders) விநியோகம் செய்யும் பணியில் அமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:—

*விவர அட்டவணை*

**பெட்ரோலிய திரவ வாயு உருளைகளை (Cylinders) விநியோகம் செய்வதில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்.* | *பணியாளர்களின் வகைகள்* | *குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (திங்களொன்றுக்கு)* | | | |
|---|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *மண்டலம்–A* | *மண்டலம்–B* | *மண்டலம்–C* | *மண்டலம்–D* |
| | | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு | ரூ. காசு |
| 1. | ரைழினல் | 3749.00 | 3669.00 | 3600.00 | 3525.00 |
| 2. | இயந்திரக்கம்மியர் காசாளர் எழுத்தர் விற்பனையாளர் | 3375.00 | 3306.00 | 3243.00 | 3174.00 |
| 3. | வணிகப் பயன்பாட்டுக்கான இலகுரக வண்டி ஓட்டுநர் | 3421.00 | 3151.00 | 3088.00 | 3025.00 |
| 4. | கிடங்குக் காப்பாளர் | 2927.00 | 2869.00 | 2812.00 | 2754.00 |
| 5. | சரக்கு ஒப்படைப்பவர் உதவியாளர் | 2628.00 | 2576.00 | 2524.00 | 2473.00 |

***விளக்கங்கள்:–***

**அகவிலைப்படி 1.** தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475 ஆகும்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் திங்களொன்றுக்கு கூடுதலாக (ரூ. 5.20) (ஐந்து ரூபாய் இருபது காசுகள் மட்டும்) அகவிலைப்படியாக வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு செயலுக்கு வரும்.

**(2) மண்டலங்களின் வகைபாடு பின்வருமாறு :**

i மண்டலம் A: மாநகராட்சிகள் மற்றும் சிறப்புநிலை நகராட்சிகள் அடங்கும்.

ii மண்டலம் B: சிறப்புநிலை நகராட்சிகள் தவிர ஏனைய அனைத்து நகராட்சிகளும் அடங்கும்.

iii மண்டலம் C: நகரியங்கள், பேரூராட்சிகள், பாளையங்கள் ஆகியவை அடங்கும்.

iv மண்டலம் D: மண்டலம் A, B, மற்றும் C-ல் குறிப்பிடப்பட்ட பகுதிகள் நீங்கலாக, ஏனைய அனைத்து பகுதிகளும் அடங்கும்.

**3.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

4. நாள் ஊதியத்தைக் கணக்கிட, மாத ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

5. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2டி) எண் 68, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, நாள் 20 டிசம்பர் 2012.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, இதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக எவரிடமிருந்தேனும், வரப்பெறும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 05—08—2009 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்-II, பிரிவு 2 இல் 255 மற்றும் 256 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/தொ.ந.வே.வா./387/2009 ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழக ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில், தங்கம் மற்றும் வெள்ளியிலான பொருள்கள் தயாரிப்பில் அமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவனைகளின் I மற்றும் II குறிப்பிடப்பட்டுள்ள வகைகளைச் சேர்ந்த பணியாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) ஆம் நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

### தங்கத்திலான பொருள்கள் தயாரிப்பு

| *தொடர் எண்* | *பொருள்கள் தயாரிப்பதற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட தங்கத்தின் எடை* | *குறைந்தஅளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (கிராம் ஒன்றுக்கு)* | |
|---|---|---|---|
| *(1)* | | *(2)* | *(3)* |
| | | கற்களுடன் கூடிய பொருள்களுக்கு ரூ. காசு | கற்கள் இல்லாமல் செய்யும் பொருள்களுக்கு ரூ. காசு |
| **A-செய்யும் வேலைக்கேற்ற ஊதியம்** | | | |
| 1 | 1 கிராம் முதல் 5 கிராம் வரை | 47.74 | 119.34 |
| 2 | 5 கிராமிற்கு மேல் 10 கிராம் வரை | 33.43 | 95.48 |
| 3 | 10 கிராமிற்கு மேல் 20 கிராம் வரை | 23.08 | 71.60 |
| 4 | 20 கிராமிற்கு மேல் 30 கிராம் வரை | 21.48 | 47.74 |
| 5 | 30 கிராமிற்கு மேல் 40 கிராம் வரை | 19.10 | 38.19 |
| 6 | 40 கிராமிற்கு மேல் 50 கிராம் வரை | 16.72 | 33.43 |

| | | | |
|---|---|---|---|
| 7 | 50 கிராமிற்கு மேல் 75 கிராம் வரை | 14.33 | 28.65 |
| 8 | 75 கிராமிற்கு மேல் | 11.93 | 23.86 |

B. நாள் அடிப்படையிலான குறைந்தளவு ஊதிய வீதம்: நாளொன்றுக்கு ரூ. 160.00

**விவர அட்டவணை II**

**வெள்ளியிலான பொருள்கள் தயாரிப்பு**

A. கொலுசு தயாரித்தல் :

| *தொடர் எண்* | *பணியின் வகை* | *குறைந்தஅளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (கிலோ ஒன்றுக்கு)* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1 | ஒரு கம்பி இழுத்தல் | 19.10 |
| 2 | ஜதை வளைத்தல் | 238.65 |
| 3 | பூக்கள் தயாரிப்பு | |
| | (a) கெட்டி | 143.22 |
| | (b) மெல்லியது | 119.34 |
| 4 | அரும்பு | 28.65 |
| 5 | சங்கிலி | 47.74 |
| 6 | சலங்கை | 119.34 |
| 7 | முகப்பு | 190.96 |
| 8 | திருகாணி | 167.07 |
| 9 | இணைத்தல் (முழு வடிவில்) | 214.82 |

B. ஏனைய வெள்ளிப் பொருட்கள் :

| *தொடர் எண்* | *பொருள்கள் தயாரிப்பதற்கு தேவையான வெள்ளியின் எடை* | *ஒவ்வொரு 10 கிராம் மற்றும் அதன் பகுதிக்கான குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்* | |
|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | |
| | | வேலைபாடற்ற பொருள்களுக்கு ரூ. காசு | வேலைபாடு உள்ள பொருள்களுக்கு ரூ. காசு |
| 1 | 1 கிராம் முதல் 10 கிராம் வரை | 28.65 | 38.19 |
| 2 | 10 கிராமிற்கு மேல் 20 கிராம் வரை | 27.84 | 35.81 |
| 3 | 20 கிராமிற்கு மேல் 30 கிராம் வரை | 26.27 | 33.43 |
| 4 | 30 கிராமிற்கு மேல் 40 கிராம் வரை | 24.66 | 31.03 |
| 5 | 40 கிராமிற்கு மேல் 50 கிராம் வரை | 23.86 | 29.45 |
| 6 | 50 கிராமிற்கு மேல் 100 கிராம் வரை | 23.08 | 28.65 |
| 7 | 100 கிராமிற்கு மேல் 200 கிராம் வரை | 21.48 | 28.65 |
| 8 | 200 கிராமிற்கு மேல் 500 கிராம் வரை | 19.10 | 24.66 |
| 9 | 500 கிராமிற்கு மேல் 1000 கிராம் வரை | 14.33 | 19.10 |
| 10 | ஒரு கிலோகிராமிற்கு மேல் | 11.93 | 15.11 |

C. நாள் அடிப்படையிலான குறைந்தளவு ஊதிய வீகிதம் நாள் ஒன்றுக்கு ரூ. 151.00

*விளக்கங்கள்:—*

**அகவிலைப்படி 1.** தொழிலாளர்களுக்கு மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு ஊதியங்களுடன், கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட புள்ளிகள் 475 ஆகும்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் நாளொன்றுக்கு, கூடுதலாக 35 காசுகள் (முப்பத்துதைந்து காசுகள் மட்டும்) அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) இந்த அகவிலைப்படி, முந்தைய 12 (பன்னிரண்டு) மாதங்களுக்கு அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையிலான நுகர்வோர் விலைப்புள்ளியின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வோராண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டெ எண்களின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து முதல் கணக்கீடு, செயலுக்கு வரும்.

2. மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிட, நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

3. பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது ஊதியம் வழங்குவதில் ஆண், பெண் தொழிலாளர்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டக்கூடாது.

5. தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி, மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2டி) எண் 3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 17 ஜனவரி 2013.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ் நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த வரைவு அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும் மேற்சொன்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர், ஏதேனும் நபரிடமிருந்து, வரப்பெறுகிற யாதொரு மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை எவையேனும் இருப்பின், அவற்றை, சென்னை—600 006—இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலமாக, தமிழ்நாடு அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர்—வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 05—08—2009 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம்-II, பிரிவு 2 இல் 259—260 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/391/2009 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில், அங்காடிகள், சந்தைகள் மற்றும் பொருட்காட்சிகள் மற்றும் அங்காடி இடங்கள் இதுபோன்ற ஏனைய இடங்களில் சுமைகளை ஏற்றி இறக்கும் பணிகளில் பணியமர்த்தப்பட்ட தொழிலாளர் வகையினருக்கு வழங்கவேண்டிய குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

## விவர அட்டவணை

**அங்காடிகள், சந்தைகள் (பொருட்காட்சிகள் மற்றும் அங்காடி இடங்கள்) மற்றும் இது போன்ற ஏனைய இடங்களில் சுமைகளை ஏற்றி இறக்கும் பணிகளில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியின் வகைகள்* | *குறைந்தஅளவு அடிப்படை ஊதிய வீதங்கள் (நாளொன்றுக்கு)* | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம்–A ரூ.காசு. | மண்டலம்–B ரூ.காசு. | மண்டலம்–C ரூ.காசு. |
| *(1)* | *(2)* | | *(3)* | |
| | | ரூ. காசு | | ரூ. காசு |
| I | **நாட்கூலி வீதங்கள்** | | | |
| | 75 கிலோ கிராம் வரையில் எடையளவுள்ள பொருட்களை ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு (ஒரு நாளில் 8 மணி நேர பணியில்) | 151.00 | 125.50 | 98.00 |
| II | **செய்யும் வேலைக்கேற்ற ஊதியம்** | | | |
| | 1. பூக்கூடைகள், பழக்கூடைகள் மற்றும் காய்கறிகள் மற்றும் ஏனைய அழுகும் பொருட்களை (கூடை ஒன்றுக்கு) ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு | 2.60 | 1.75 | 1.30 |
| | 2. 25 கிலோ கிராம் வரையில் எடையளவுள்ள பொருட்களை ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு | 1.75 | 1.30 | 0.90 |
| | 3. 25 கிலோ கிராமுக்கு மேற்பட்டு ஆனால் 50 கிலோ கிராமுக்கு மிகாத எடையளவுள்ள பொருட்களை ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு | 2.60 | 1.75 | 1.30 |
| | 4. 50 கிலோ கிராமுக்கு மேற்பட்டு ஆனால் 75 கிலோ கிராமுக்கு மிகாத எடையளவுள்ள பொருட்களை ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு | 3.50 | 1.75 | 1.30 |
| | 5. 75 கிலோ கிராமுக்கு மேற்பட்டு ஆனால் 100 கிலோ கிராமுக்கு மிகாத எடையளவுள்ள பொருட்களை ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு | 4.35 | 2.60 | 1.75 |
| | 6. 100 கிலோ கிராமுக்கு மேற்பட்ட எடையளவுள்ள பொருட்களை ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு | 5.20 | 3.50 | 2.60 |
| | 7. மெட்ரிக் டன்களில் ஏற்றுவதற்கு அல்லது இறக்குவதற்கு (மெட்ரிக் டன் ஒன்றுக்கு) | 42.85 | 25.70 | 17.15 |

***விளக்கங்கள்:—***

**1, மண்டலங்களின் வகைப்பாடு :**

*மண்டலம்* A: மாநகராட்சிகள் மற்றும் சிறப்புநிலை நகராட்சிகள்

*மண்டலம்* B: ஏனைய நகராட்சிகள்

*மண்டலம்* C: ஏனைய இடங்கள் (மண்டலம் 'A' & 'B'—இன்கீழ் வராதவை)

**2. *அகவிலைப்படி*:**

மேலே குறிப்பிடப்பட்ட தொழிலாளர்கள், குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன், கீழே விவரிக்கப்பட்டவாறான அகவிலைப்படியை பெறுவதற்கு தகுதியுடையவர்கள் ஆவர்.

(i) அகவிலைப்படி, 2000 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1882—100 என்பதன் அடிப்படையில் 475 புள்ளிகள் ஆகும்) 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிகளுக்கும் நாளொன்றுக்கு 20 காசுகள் (இருபது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்குரிய அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை நுகர்வோர் விலைப்புள்ளிகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முதல் கணக்கீடு முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைப்புள்ளி குறியீட்டு எண் சராசரியை அடிப்படையாகக் கொண்டு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2.** ஒரே தன்மையுடைய பணியை செய்யும்போது ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**3.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களில் எல்லாம், அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

**(தமிழாக்கம்)**

**ந. அருள்,**
*இயக்குநர்.*
*தமிழ் வளர்ச்சி, மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.